# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1885/47 - 2014 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2014.10.24

*1885 /47 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 04 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் 2014.05.21 ஆந் திகதியும் 1863/13 ஆம் இலக்கமும் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உழுந்து சம்பந்தமான உத்தரவு (எச். எஸ். தலைப்பு இல. 0713.31.29), மாஜரின் (எச். எஸ். தலைப்பு இல. 1517.10.10, 1517.10.90) மற்றும் 2014.07.25 ஆந் திகதிய 1872/35 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவு 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.13 | 0713.10.10 | பட்டாணிக் கடலைகள் (பைசம் சற்றைவம்) - முழுமையானவை | ரூபா 15.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0713.10.20 | பட்டாணிக்கடலை (பைசம் சற்றைவம்) - (பிளக்கப்பட்டவை) | ரூபா 18.00 கி. கிராம் ஒன்றுக்கு |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 2. | | 0713.20.10 | சிக் கடலைகள் (காபன் சோகன்) முழுமையானவை | ரூபா 7.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0713.20.20 | சிக் கடலை (காபன் சோகன்) முழுமையானவை (பிளக்கப்பட்டவை) | ரூபா 10.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 3. | | 0713.31.19 | பிற - பாசிப்பயறு | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 4. | | 0713.31.29 | பிற - கறுப்பு உழுந்து | ரூபா 110.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 5. | | 0713.35.90 | பிற - கௌபி | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 6. | | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) முழுமையானவை | ரூபா 2.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புக்கள்) பிளக்கப்பட்டவை | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்புகள் - முழுமையானவை | ரூபா 2.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்புகள் - பிளக்கப்பட்டவை | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 7. | 10.05 | 1005.90 | பிற- மக்காச் சோளம் (கோர்னன்) | 10% கி. கிராம் ஒன்றுக்கு |
| | 10.07 | 1007.10 | இறுங்கு தானியம் (சோர்க்கம்) - விதை | 10% கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1007.90 | இறுங்கு தானியம் (சோர்க்கம்) - பிற | 10% கி. கிராம் ஒன்றுக்கு |
| 8. | 10.08 | 1008.21.10 | விதை - குரக்கன் (எலியுசைன் குரக்கன் இன) | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1008.21.90 | பிற - பிற (மில்லெட்) | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1008.29.10 | பிற - குரக்கன் (எலியுசைன் குரக்கன் இன) | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1008.29.90 | பிற (மில்லெட்) | ரூபா 70.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| 9. | 1517 | 1517.10.30 | 80% அல்லது அதற்கு மேற்பட்ட கொழுப்பு களுடன் | ரூபா 175.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1517.10.90 | பிற | ரூபா 275.00 கி. கிராம் ஒன்றுக்கு |

11- 201

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.